பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**19 03 2026** **6 45**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் 100 தொழிற்பூங்காக்களை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது, உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பணியில் இருந்து ஓய்வு என்பது, முடிவு என்பதாக கருதாமல் புதிய பொறுப்புகளின் தொடக்கமாக கருத வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

3. ரயில்வே துறையில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக கடந்த 11 ஆண்டுகளில் 942 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தின் சில பகுதிகளில் 3 தினங்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. **Orleans Masters** பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் இஷா ராணி பரூவா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடு முழுவதும் 100 தொழிற்பூங்காக்களை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதன் மூலம் உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இதனால் முதலீடு அதிகரிப்பதுடன் வேலைவாய்ப்பும் பெருகும் என்றும் கூறியுள்ளார்.

இத்திட்டம் வர்த்தகம் புரிவதை எளிதாக்கும் என்றும், சரக்குப் போக்குவரத்து மற்றும் சேவைத் துறைகளுக்கு சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்தும் என்றும் கூறியுள்ளார்.

சிறய அளவிலான நீர்மின் உற்பத்தி மேம்பாட்டு திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதன் மூலம் கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் தூய்மை எரிசக்தி ஊக்கமளிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் அப்பகுதிகளில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு வேலைவாய்ப்பும் அதிகரிக்கும் என்று கூறியுள்ளார்.

குறிப்பாக வடகிழக்கு பிராந்தியங்கள் இத்திட்டத்தின் மூலம் பெரும் பயனடையும் என்றும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பணியில் இருந்து ஓய்வு என்பது முடிவு என்பதாக கருதாமல் புதிய பங்களிப்பு மற்றும் பொறுப்புகளின் தொடக்கமாக கருத வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்காலம் விரைவில் முடிவடைய உள்ள 59 உறுப்பினர்களுக்கு நேற்று அவையில் பிரியாவிடை அளிக்கப்பட்டது.

அப்போது பேசிய திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், ஓய்வு பெறும் உறுப்பினர்களின் புதிய பங்களிப்பு என்பது புதிய உறுப்பினர்களிடம் பொறுப்புகளை ஒப்படைப்பதாக தெரிவித்தார்.

அதேவேளையில் ஓய்வு பெறும் உறுப்பினர்கள் தங்கள் பதவிக் காலத்தில் கிடைத்த அனுபவம், அடுத்த தலைமுறை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வழிகாட்டி ஊக்கமளிக்கக் கூடும் என்று கூறினார்.

ஓய்வு பெற உள்ள உறுப்பினர்களின் அனுபவத்தால் அவை பெறும் பயனடைந்துள்ளதாக தெரிவித்தார்.

நாட்டின் பல்வேறு பிராந்தியங்கள் மற்றும் சமூகங்களை சேர்ந்த உறுப்பினர்கள் அவை விவாதங்களில் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளதாக கூறினார்.

ஒருவர் ஓய்வு பெற்றாலும் அவரது செயல்களால் ஏற்பட்ட நன்மைகள் தொடர்ந்து நிலைத்திருக்கும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

ரயில்வே துறையில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக கடந்த 11 ஆண்டுகளில் 942 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், அதிவிரைவு ரயில், சரக்குப் போக்குவரத்து மற்றும் பயணிகள் சேவை ஆகியவற்றுக்காக சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, ரஷ்யா, ஸ்பெயின் நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாக கூறினார்.

கடந்த 9 ஆண்டுகளில் 26 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரயில் பெட்டிகள் மற்றும் முக்கிய உபகரணங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

ஆஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா, ஃபிரான்ஸ் உள்ளிட்ட வளரும் நாடுகளுக்கு இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் ரயில் பெட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

மேற்காசிய பிராந்தியத்திற்கு இன்று 48 விமனாங்களை ஏர்-இந்தியா மற்றும் ஏர்-இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனங்கள் இயக்க உள்ளன.

ஜெட்டா, மஸ்கட் நகரங்களுக்கான வழக்கமான சேவைகளும் இதில் அடங்கும்.

தில்லி, மும்பையில் இருந்து தலா ஒரு விமானத்தை இரு மார்க்கங்களிலும் ஏர்-இந்தியா நிறுவனம் இயக்க உள்ளது.

தில்லியில் இருந்து ரியாதிற்கு 2 விமானங்களை இரு மார்க்கத்திலும் ஏர்-இந்தியா இயக்க திட்டமிட்டுள்ளது.

அத்துடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியாவுக்கு 30 சிறப்பு விமானங்களும் இயக்கப்பட உள்ளதாக ஏர்-இந்தியா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் ஏர்-இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனம், பெங்களூரு, ஹைதராபாத், கோழிக்கோட்டிலிருந்து விமானங்களை இயக்க உள்ளது.

மஸ்கட்டில் இருந்து தில்லி, கோழிக்கோடு, மும்பை நகரங்களுக்கு 6 விமானங்களை இயக்க உள்ளது.

<<<<>>>>

தமிழக கடலோரப் பகுதிகள், டெல்டா மாவட்டங்கள், வட மாவட்டங்களின் உள்பகுதிகள் ஆகியவற்றில் மூன்று நாட்களுக்கு இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதிகபட்ச வெப்பநிலை வரும் 22ஆம் தேதி வரை படிப்படியாக குறையும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நள்ளிரவு கனமழை பெய்தது.

வேலூர் மாவட்டத்திலும் நள்ளிரவு கனமழை பெய்தது. கடும் வெப்பத்தால் அவதிப்பட்டு வந்த மக்கள் இந்த மழை காரணமாக மகிழ்ச்சியடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Mohan - 36 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கத்தார் நாடுகளில் உள்ள எரிசக்தி தளங்களை தாக்க உள்ளதால் அப்பகுதியில் இருந்து மக்கள் வெளியேறுமாறு ஈரான் ராணுவம் கேட்டுக்கொண்டுள்ளது.

-------------

இலங்கையில் டித்வா புயலால் சேதமடைந்த **Chilaw-Thoduwawa** சாலைப் பகுதியில் இந்தியாவின் உதவியுடன் கட்டப்பட்ட பாலம் நேற்று திறக்கப்பட்டது.

-------------

உகாதி, **Sukladi, Gudi Padava, Cheti Chand, Navreh, Sajibu Cheiraoba** பண்டிகைகளை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

--------------

தில்லியில் மின்சார வாகனங்களை வாங்கிய நுகர்வோருக்கு, அளிக்க வேண்டிய, நீண்டகாலமாக நிலுவையில் உள்ள மானியத் தொகை விரைவில் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

--------------

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் தேர்தல் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட **4** லட்சத்து **52** ஆயிரம் ரூபாய்க்கான உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதால் சம்பந்தப்பட்வர்களிடம் பணம் ஒப்படைக்கப்பட்டது.

--------------

ஈரோட்டில் தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய வாகன சோதனைகளில் உரிய ஆவணமின்றி எடுத்துச் செல்லப்பட்ட ஐந்து லட்சத்து **24** ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

--------------

திருவள்ளூர் அருகே பட்டறைப்பெரும்புதூரில் தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய வாகன சோதனையில் உரிய ஆவணங்களின்றி

கொண்டு செல்லப்பட்ட **34** சவரன் நகை, **2** லட்சம் ரூபாய் ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

--------------

விருதுநகரில் **18** வயதுக்கும் மேற்பட்ட அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

--------------

மதுரை திருமங்கலம் அரசு கலை, அறிவியல் கல்லூரியில் பொதுமக்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

--------------

சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே கொளத்தூர் வனப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயை தீயணைப்புத் துறையினர் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக போராடி தீயை அணைத்தனர்.

--------------

ராணிப்பேட்டை மாவட்டம் காரையில் பதற்றமான வாக்குச்சாவடிகளை ஆட்சியர் திருமதி சந்திரகலா ஆய்வு செய்தார்.

--------------

ரயில் தண்டவாளங்கள் அருகே குப்பைகளை எரிப்பதை மக்கள் தவிர்க்க வேண்டும் என்று சென்னை ரயில்வே கோட்டப்பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

--------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**Orleans Masters** பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் இஷா ராணி பருவா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-19, 21-19** என்ற செட் கணக்கில் டென்மார்க்கின் **Amalie Schulz**-ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் கபூர் - ருத்விகா ஷிவானி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்றில் இந்த இணை **21-15, 21-9** என்ற செட் கணக்கில் தைவான் இணையை வென்றது.

--------------

மெக்சிகோவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் ரித்விக் போலிபள்ளி - அர்ஜுன் கதே இணை காலிறுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 6-3, 6-4 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் Lamens - Winegar இணையை வென்றது.

**<<<<The End>>>>**